V8S

www.freetnbooks.com

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டு பொதுத்தேர்வு - டிசம்பர் 2025

-----

வகுப்பு 8

அறிவியல்

கால அளவு: 2.30 மணிநேரம் | மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்வு செய்க** **12×1=12**

1) கீழ்க்கண்டவற்றுள் எது ஆங்கிலேய அலகு முறை?
அ) CGS ஆ) MKS இ) FPS ஈ) SI

2) அழுத்தத்தின் அலகு
அ) பாஸ்கல் ஆ) $Nm^{-2}$ இ) பாய்ஸ் ஈ) அ மற்றும் ஆ

3) வெப்பம் என்பது ஒரு வகையான ..........
அ) மின்னாற்றல் ஆ) ஈர்ப்பு ஆற்றல் இ) வெப்ப ஆற்றல் ஈ) எதுவுமில்லை

4) ஒலி அலைகள் எதில் மிக வேகமாகப் பரவுகின்றன
அ) காற்று ஆ) உலோகங்கள் இ) வெற்றிடம் ஈ) திரவங்கள்

5) பாதரசத்தின் குறியீடு
அ) Ag ஆ) Hg இ) Au ஈ) Pb

6) .............. உலோகம் துருப்பிடித்தலுக்கு காரணமாகிறது.
அ) வெள்ளீயம் ஆ) சோடியம் இ) காப்பர் ஈ) இரும்பு

7) எந்த வெப்பநிலையில் நீர் பனிக்கட்டியாக மாற்றமடையும்?
அ) $0^{o}C$ ஆ) $100^{o}C$ இ) $102^{o}C$ ஈ) $98^{o}C$

8) சிவப்பு எறும்பின் கொடுக்கில் ............ அமிலம் உள்ளது
அ) அசிட்டிக் அமிலம் ஆ) சல்பியூரிக் அமிலம்
இ) ஆக்சாலிக் அமிலம் ஈ) ஃபார்மிக் அமிலம்

9) மனிதருக்கு சாதாரண சளியை உண்டாக்கும் நுண்ணுயிரி
அ) பிளாஸ்மோடியம் ஆ) இன்புளூயன்ஸா
இ) விப்ரியோ காலரே ஈ) ஆப்தோ வைரஸ்

10) மண் அரிப்பைத் தடுக்கும் தாவரங்கள்
அ) பாசிகள் ஆ) பூஞ்சைகள்
இ) பிரையோஃபைட்டுகள் ஈ) டெரிடோஃபைட்டுகள்

11) நுரையீரலுக்கு உள்ளேயும், வெளியேயும் வாயுப்பரிமாற்றம் நடைபெறும் நிகழ்விற்கு .......... என்று பெயர்
அ) உட்சுவாசம் ஆ) வெளிச்சுவாசம் இ) சுவாசம் ஈ) ஏதுமில்லை

12) ஆடம்ஸ் ஆப்பிள் என்பது இதன் வளர்ச்சியைக் குறிக்கிறது
அ) தொண்டைக்குழி ஆ) தைராய்டு
இ) குரல்வளை ஈ) பாராதைராய்டு

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக** **5×1=5**

13) நீரியல் உயர்த்தி .............. விதியை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது
14) ஒளிக்கதிர் ஒன்றின் படுகோணத்தின் $45^{o}C$ மதிப்பு எனில் எதிரொளிப்புக் கோணத்தின் மதிப்பு .............
15) இரும்பை நீரேறிய இரும்பு ஆக்ஸைடாக மாற்றும் நிகழ்வு ........... எனப்படும்
16) ......... என்பது ஒரு தனிமத்தின் மிகச்சிறிய துகள்
17) .......... தசை கண்பாவையை அகலமாக்குகிறது

**III. சரியா அல்லது தவறா எனக் கூறுக. தவறான கூற்றைத் திருத்துக** **5×1=5**

18) 4.582 எண்ணின் முழுமையாக்கப்பட்ட மதிப்பு 4.58
19) பக்க இணைப்பில் அனைத்துக் கூறுகளிலும் மின்னோட்டம் மாறிலியாக இருக்கும்
20) CFC என்பது ஒரு மாசுபடுத்தியாகும்
21) நோயுண்டாக்கும் நுண்ணுயிர்கள் நோய்க்கிருமிகள் என அழைக்கப்படுகின்றன.
22) மனிதன் ஒரு வெப்ப இரத்தப் பிராணி

**IV. பொருத்துக** **5×1=5**

| | | |
|---|---|---|
| 23) பொருண்மை அழியா விதி | - | சர்வில்லியம் குரூக்ஸ் |
| 24) மாறா விகித விதி | - | ஜேம்ஸ் சாட்விக் |
| 25) கேதோடு கதிர்கள் | - | ஜோசப் ப்ரௌஸ்ட் |
| 26) ஆனோடு கதிர்கள் | - | லவாய்சியர் |
| 27) நியூட்ரான் | - | கோல்ஸ்டீன் |

www.freetnbooks.com | FREETNBOOKS
Kindly Send Me Your Study Materials To Us Email ID:
Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



**V. எவையேனும் 10 வினாக்களுக்கு மிகச்சுருக்கமாக விடையளி** **10×2=20**

28) பாஸ்கல் விதியைக் கூறு

29) ஒளிவிலகலுக்கான ஸ்நெல் விதியினைக் கூறுக.

30) மோல் வரையறு

31) வெப்பம் கடத்தப்படும் மூன்று முறைகள் யாவை?

32) மின்சுற்று என்றால் என்ன?

33) ஒலிமாசுபாட்டின் விளைவுகள் யாவை?

34) உலக வெப்பமயமாதல் என்றால் என்ன?

35) பொருண்மை அழியா விதி - வரையறு

36) நீரின் கடினத்தன்மையை நீக்கும் முறைகள் யாவை?

37) காற்றுள்ள மற்றும் காற்றில்லா சுவாசத்திற்கு இடையே உள்ள வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.

38) பறவையின் எலும்புக்கூடு எவ்வாறு பறப்பதற்கு ஏற்றதாக உள்ளது?

39) வளரிளம் பருவம் குழந்தைப் பருவத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

40) ஏதாவது மூன்று புரோட்டோசோவாக்களின் பெயர்களை எழுதுக

**VI. எவையேனும் 8 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி** **8×4=32**

41) உராய்வு எவ்வாறு குறைக்கப்படுகிறது என்பதை விளக்குக

42) தொடர் மற்றும் பக்க இணைப்புச் சுற்றை விளக்குக

43) பெரிஸ்கோப் செயல்படும் விதம் பற்றி விவரிக்கவும்.

44) பின்வரும் தனிமங்களின் குறியீடுகளை எழுதுக

அ) அ) ஆக்ஸிஜன் ஆ) தங்கம் இ) கால்சியம் ஈ) இரும்பு

ஆ) கீழ்க்காணும் சமன்பாடுகளை சமன்செய்க

அ) $Na+O_2 \rightarrow Na_2O$ ஆ) $N_2+H_2 \rightarrow NH_3$

45) உலர்பனி என்பது யாது? அதன் பயன்களை எழுதுக

46) காரங்களின் பயன்கள் யாவை?

47) விவசாயத்தில் நுண்ணுயிர்கள் அத்தியாவசிமானவை ஏன்?

48) பாசிகளுக்கும், பூஞ்சைகளுக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக

49) மனித கண்ணின் படம் வரைந்து பாகம் குறிக்கவும்.

50) **பின்வருவனவற்றை வேறுபடுத்துக**

அ) இயக்கம் மற்றும் இடம் பெயர்தல்

ஆ) தோள்பட்டை வளையம் மற்றும் இடுப்பு வளையம்

**VII. விரிவான விடையளி** **3×7=21**

51) வெப்பக் குடுவை வேலைசெய்யும் விதத்தை விளக்குக

**(அல்லது)**

ஒலி மாசுபாட்டின் விளைவுகளைக் குறைக்க என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?

52) உலோகங்களுக்கும் அலோகங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் ஏதேனும் நான்கினை அட்டவணைப்படுத்துக.

ஆ) பின்வரும் குறியீடுகளால் குறிக்கப் பெறும் தனிமங்களின் பெயர்களை எழுதுக

i) Na ii) W iii) U iv) Ba v) Al vi) Cu

**(அல்லது)**

நமது அன்றாட வாழ்வில் நடைபெறும் நடுநிலையாக்கல் வினைகளை விவரி.

53) மருத்துவத் தாவரத்தின் பெயர்களை எழுதி அவற்றின் பயன்களை விவரிக்கவும்.

**(அல்லது)**

மாதவிடாய் சுழற்சியினைப் பற்றி சுருக்கமாக விவரி.

\- - - - -

Kindly Send Me Your Study Materials To Us Email ID: www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner